செ.வெ.எண்:24/ஜூன் நாள்:13.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தொழிலாளர் துறையின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான விழிப்புணர்வு பேரணியை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார்.

தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரண்மனை சாலையில் இன்று (13.06.2016) தொழிலாளர் துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார்.

கல்வி கற்பது குழந்தைகளின் அடிப்படை உரிமை. குழந்தைகளை பணிக்கு அனுப்பாமல் கல்வி கற்க பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி குழந்தை தொழிலாளர் முறையினை முழுவதுமாக அகற்றிட விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் 12-ஆம் நாள் தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமான நேற்று இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பள்ளி செல்லும் குழந்தைகள் பங்கேற்ற மனித சங்கிலி நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் இராமநாதபுரம் அரண்மனை சாலையில் தொழிலாளர் துறையின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜா மேல்நிலைப்பள்ளி, ஸ்வார்ட்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஸ்வார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். இப்பேரணியானது அரண்மனை வாசலில் துவங்கி அரண்மனை சாலை வழியாக சென்று ஸ்வார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நிறைவு பெற்றது.

இப்பேரணியின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகளை பணியில் அமர்த்தும் நிறுவனங்கள் / நபர்கள் குறித்து புகார் தெரிவித்திட ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள சைல்டு லைன் - 1098 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் குறித்த ஒட்டுவில்லைகளை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜெயக்கண்ணு, மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் திரு.காளிதாஸ், துணை ஆய்வாளர் திரு.விஸ்வநாதன், உதவி ஆய்வாளர்கள் திரு.கதிரவன், திரு.கோபால கிருஷ்ணன், திரு.புஷ்பராஜ், சைல்டு லைன் இயக்குநர் திரு.கருப்பசாமி உட்பட அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**